*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 336- 339, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

RESEARCH ARTICLE

# சோழர்களின் வரலாற்று மூலங்களும் அதன் காலவரன்முறையும்

இரா. சுகந்தி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

*ஆய்வுச் சுருக்கம்*

சிற்றரசர்களான சோழர்கள் தம் ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் ஏற்படுத்தத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். பல குறுநில மன்னர்களோடு திருமணத் தொடர்பு கொண்டு இழந்த செல்வாக்கை சோழர்கள் மீட்க முயன்றனர். பல்லவருக்கு கீழடங்கி ஆண்ட சிற்றரசனான விசயாலய சோழன் என்பவன் பாண்டிய மேலாதிக்கத்திலிருந்து ஆட்சி செய்த முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றிப் பிற்காலச் சோழர் பரம்பரையைத் தோற்றுவித்தான். சிரீகாந்த சிரீமனோகர சோழனின் வழித்தோன்றல் விசயாலய சோழன் என சுந்தர சோழன் வெளியிட்ட அன்பில் பட்டயம் தெரிவிக்கின்றது. பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிய வெங்கையா, உல்ச், கிருட்டிணசாத்திரி ஆகியோர் தொகுத்த கல்வெட்டுகளும் மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகளும் வழி செய்கின்றன. அன்பில் பட்டயங்கள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கரந்தைச் செப்பேடுகள், ஆனைமங்கலம் செப்பேடுகள், லெடன் செப்பேடுகள் ஆகியவை அவற்றுள் சில. இவை தவிர இலக்கிய, இலக்கணங்களும் கலிங்கத்துப்பரணி, மூவருலா, பெரியபுராணம், பன்னிரு திருமுறைகள், திவ்யசூரிசரிதம், வீர சோழியம், தண்டியலங்காரம் போன்ற நூல்களும் இக்காலத்தை அறிய உதவும் சன்றுகளாக உள்ளன.

**குறிச்சொற்கள்:** விசயாலய சோழன்,ஆதித்த சோழன், பராந்தக சோழன்,கண்டராதித்த சோழன்

**முன்னுரை**

சோழர்களின் தோற்றம் பற்றிய தெளிவான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை .பொதுவாகத் தமிழ் நாட்டு அரச குடிகள் பற்றிய தகவல்களைப் பெற உதவும் மூலங்களான, சங்க இலக்கியங்கள் கிறித்து சகாப்தத்தின் தொடக்க காலத்தைச் சேர்ந்த சோழ மன்னர்கள் பற்றி ஓரளவு தகவல்களைப் பெற உதவினாலும், அவர்கள் வாழ்ந்த காலப் பகுதிகளை ஐயத்துக்கு இடமின்றி அறிந்து கொள்வதோ, அவர்கள் வரலாறுகளை முழுமையாக அறிந்து கொள்வதோ இயலவில்லை. இலங்கையின் பாளி மொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூலான மகாவம்சத்தில் தரப்படுகின்ற செய்திகள் சில சோழ மன்னருடைய காலங்களைத் தீர்மானிப்பதற்குப் பயனுள்ளவையாக அமைகின்றன. இவற்றைவிட, சோழ நாடு மற்றும் அங்கிருந்த நகரங்கள் பற்றிய சில தகவல்களைப் பெறுவதற்கு, கிறித்து சகாப்தத்தின் முதலாவது நூற்றாண்டில், அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த வணிகன் ஒருவன் எழுதிய எரித்ரேயன் கடலின் வழிகாட்டி நூல் *(Periplus of the Erythraean Sea)*, அதன் பின் அரை நூற்றாண்டு கழித்து தொலெமி *(Ptolemy)* என்னும் புவியியலாளரால் எழுதப்பட்ட நூல் என்பவை ஓரளவுக்கு உதவுகின்றன. இவற்றுடன் கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள் என்பனவும் சோழர் பற்றிய தகவல்களைத் தருகின்றன. பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிய வெங்கையா, உல்ச், கிருட்டிணசாத்திரி ஆகியோர் தொகுத்த கல்வெட்டுகளும் மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகளும் வழி செய்கின்றன. அன்பில் பட்டயங்கள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கரந்தைச் செப்பேடுகள், ஆனைமங்கலம் செப்பேடுகள்,

லெடன் செப்பேடுகள் ஆகியவை அவற்றுள் சில. இவை தவிர இலக்கிய, இலக்கணங்களும் கலிங்கத்துப்பரணி, மூவருலா, பெரியபுராணம், பன்னிரு திருமுறைகள், திவ்யசூரிசரிதம், வீர சோழியம், தண்டியலங்காரம் போன்ற நூல்களும் இக்காலத்தை அறிய உதவும் சன்றுகளாக உள்ளன.

**சோழர் காலக் கல்வெட்டுகள்**

சோழர் காலக் கல்வெட்டுகள் தனித்தன்மை வாய்ந்தவை. கல்வெட்டின் தொடக்கத்தை வைத்தே குறிப்பிட்ட காலத்தை அல்லது குறிப்பிட்ட அரச மரபால் வெட்டப்பட்டது எனக் கூற முடியும். சோழர் காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கவை மெய்கீர்த்தி என்னும் கல்வெட்டுப் பகுதியாகும். இவை செய்திகளைக் கூறுவதில் ஓர் இலக்கிய வடிவைப் பெற்றுத் திகழ்ந்தன. மெய்கீர்த்திகள் அரசனுடைய உண்மையான புகழை எடுத்துக் கூறுவதோடு அக்கால வரலாற்றையும் தெளிவாக்குகின்றன. மேலும், அரசர் தேவியருடன் வாழ்க என வாழ்த்தியும், இயற்பெயரோடு சிறப்புப் பெயரையும், ஆட்சியாண்டையும் குறிப்பிடுகின்றன. இராசராச சோழனின் மெய்கீர்த்தி சிறந்த இலக்கிய நடையில் அமைக்கப்பட்டுள்ளது. மெய்கீர்த்தியின் தொடக்கத்தை வைத்தே அது எந்த அரசனுடையது என்பதை அறியலாம். சோழர் காலக் கல்வெட்டுகளில் கொடைச் செய்தி மட்டுமின்றி கல்வி, மருத்துவம், நீதி முறை, ஊராட்சி முறை போன்ற செய்திகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. முதலாம் இராசேந்திரனுடைய 'எண்ணாயிரம்' என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டும், செங்கல்பட்டு வட்டம் திருமுக்கூடலில் காணப்படும் கல்வெட்டும் சோழர் காலக் கல்வி முறையை விளக்குவனவாக உள்ளன. செங்கல்பட்டு வட்டத்தில் உள்ள திருமுக்கூடல் கல்வெட்டு வீரராசேந்திரனுடைய மருத்துவச்சாலை பற்றி குறிப்பிடுகிறது. அதில், மருத்துவச்சாலை "ஆதுரச்சாலை" என்று சுட்டப்படுகிறது. ஊரவையினரைத் தேர்ந்தெடுக்கும் முறை தொண்டை நாட்டு உத்திரமேரூரிலுள்ள ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. முதலாம் இராசராசன் தஞ்சாவூரில் இராசராசேச்சுவரம் என்ற கற்கோவில் கட்டி அதற்கு அளித்த கொடைகள் பற்றி இக்கோவில் கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன.

**காசுகள்**

சோழப்பெருமன்னர்களால் வெளியிடப்பெற்ற தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகக் காசுகள் மிகுந்த அளவில் ஆய்வாளர்களுக்குக் கிடைத்துள்ளன. உத்தமசோழன், இராசராசன், இராசேந்திரன் ஆகிய மன்னர்களின் பெயர் பொறித்த காசுகளும் கிடைத்துள்ளன. சங்ககாலச் சோழர் காசுகளில் இதுவரை முத்திரைக் காசுகள் கிடைக்கவில்லை எனினும் ஒரு பக்கம் புலி சின்னம் மட்டும் முத்திரை முறையில் பொறிக்கப் பெற்றுள்ள ஒரே ஒரு காசு மட்டும் கிடைத்துள்ளது. ஆயினும் முத்திரைக் காசுகளைத் தழுவி யானை, வேலியிட்ட மரம், 6 முகடுள்ள குன்று, நதி, காளை, மீன்கள் போன்ற எச்சின்னமும் முதன்மைப்படுத்தப்படாத வகை காசுகளை இவர்கள் வெளியிட்டுள்ளனர். அத்தகைய காசுகள் முற்காலத்தை (பொ.ஆ.மு. 2.1 ஆம் நூ. ) சேர்ந்தவையாகும். எத்தகைய காசுகளாயினும் ஒரு பக்கம் சோழரது குலச்சின்னமான வாய்ப்பிளந்து வால் உயர்த்தி நிற்கும் புலி உருவம் இவர்களது காசுகளில் இடம்பெற்றிருக்கும். பிற அரச குலங்களைப் போலவே யானை முதன்மைப்படுத்தப்பட்டு வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ நோக்கி நிற்பது போல உள்ள காசுகளும் குதிரை பூட்டிய ரதம், திமிலுள்ள காளை போன்ற காசுகள் இடைக்காலத்தையும் (பொ.ஆ. 1-2 ஆம் நூ.) யானை, கொடி, மேற்புறம் குடை விளிம்பை ஒட்டி சிறு உருவம் உள்ள காசுகள் பிற்காலத்தையும் (பொ.ஆ.3) சேர்ந்தவையாகக் கருதப் பெறுகின்றன. சங்ககாலச் சோழரது எழுத்துப்பொறிப்புக் காசுகள் இது நாள் வரையில் கிடைக்கவில்லை என்பதும் இங்குச் சுட்டத்தக்கது.

**உத்திரமேரூர் குடவோலை முறைக் கல்வெட்டுக்கள்**

உத்திரமேரூரில் ஊர் பெருமக்கள் சபை இயங்கி வந்துள்ளது. இச்சபை உழவு, கல்வி, மராமத்துவேலை, கோயில் பணி, வாணிபம் முதலானவற்றை நிர்வகித்து வந்தது. சபை பல வாரியங்களாகச் செயல்பட்டது. குடவோலை முறையில் அங்கத்தினர் தேர்வு செய்யப்பட்டது போன்ற சிறப்புமிக்க ஊராட்சிமுறையைப் பற்றி 2 கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.அவற்றுள் ஒன்று முதலாம் பராந்தகனின் 12 ஆம் ஆட்சியையும் (கி.பி917), மற்றொன்று 14ஆம் ஆட்சியாண்டையும் சேர்ந்தது (கி.பி919). உத்திரமேரூர் இரண்டாம் நந்திவர்மனது காலத்திலேயே முதன்முதலாக உத்திரமேரூர் (கி.பி.750) சதுர்வேதிமங்கலமாக உருவாக்கப்பட்டது. 1200 வேத வைஷ்ணவ பிராமணர்களுக்குத் (சதுர்வேதிமங்கலமாக) தானமாக வழங்கப்பட்ட நிலமாகும். எனவே ஆரம்பமுதலே இது ஒரு பிராமண குடியிருப்பாக திகழ்ந்துள்ளது. சோழரது காசுகள் கரூர் – அமராவதி, மதுரை – வைகை ஆற்றுப்படுகை அரியலூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டின அகழாய்வில் மணிக்கிராமம், வானகிரி போன்ற இடங்களில் முன்புறம் யானையும் பின்புறம் புலியும் பொறித்தக் காசுகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் மட்டுமின்றி தாய்லாந்தில் குவான் – லுக் – பத் (kuan-luk-pat) என்ற இடத்தில் ஒரு பக்கம் ரதம் பூட்டிய குதிரையும் பின்புறம் புலியும் உள்ள காசு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**முதலாம் இராசராச சோழரின் கல்வெட்டு**

சோழ மண்டலத்தில் பிற இடங்களில் இருக்கும் கோயில் பணிப்பெண்களை தஞ்சாவூர் பெரியக்கோயில்

பணிக்காக நியமிக்கிறார் சோழ மன்னன் முதலாம் ராஜராஜன். ஏற்கெனவே பெரிய கோயிலில் பணியாற்றும் தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் தற்பொழுது வீடும் பங்கும் ஒதுக்கப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டில் மொத்தம் 400 தளிச்சேரிப் பெண்டுகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவர்களை இங்கு குடியமர்த்தியதுடன் அவர்களுக்கான பணிகளும் ஊதியமும் நிர்ணயிக்கப்பெற்று கல்லில் வெட்டப்பட்டுள்ளது. இவ்வூதியம் பங்கு என்ற தொடரினால் சுட்டப்பெற்றுள்ளது. கோயில் பணி செய்யும் பெண்கள் "தேவரடியார்" என்றும் "தளிச்சேரிப் பெண்டுகள்" என்றும் அழைக்கப்பெற்றுள்ளனர். இவர்கள் பதியிலார் என்றும் அழைக்கப்பெறுவது உண்டு. இவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 100 கலம் நெல் விளையும் ஒரு வேலி நிலம் காணியாக வழங்கப்பெற்றுள்ளது. காணிப் பெற்ற தேவரடியார் இறந்துவிட்டால் அவரது வம்சத்தாரில் யோக்யராய் இருப்போருக்கு அக்காணி வழங்கப்பெற்றுள்ளது. அவ்வாறு அவ்வம்சத்தில் யோக்யர் இல்லாதுபோனால் யோக்யராய் இருப்போரை மற்றவர் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் கூறப்பெற்றுள்ளது. 400 தேவரடியார்களுக்கு வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வீடுகள் தலைவீடு, இரண்டாம் வீடு,மூன்றாம் வீடு என்று வரிசைப்படுத்தப் பெற்றுள்ளன.

### சோழர் கால இலக்கியங்கள்

பிற்காலச் சோழர்களின் ஆட்சிக் காலமான நானூறு ஆண்டுகள் தமிழக வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றிக் கூறப்படுகிறது. போர்கள், நாடுகளை வென்று கைப்பற்றல், கோயில் பணி என்றிருந்த காலத்தில் தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும் ஏற்றம் பெற்றன. பிற்காலச் சோழ மன்னர்கள் அளித்த பேராதரவின் காரணமாகத் தமிழில் இறவாப் புகழ் பெற்ற எண்ணிலாத இலக்கியப் படைப்புகள் தோன்றின. பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், இலக்கண நூல்கள், உரை நூல்கள் என வகைப்படுத்திக் காணலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியவை ஐம்பெருங்காப்பியங்கள் என்று கூறப்படுகின்றன. இவற்றுள் சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய மூன்று பெருங்காப்பியங்களும் பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றியவை ஆகும்.

சீவக சிந்தாமணியும், வளையாபதியும் சமண சமயம் சார்ந்த காப்பியங்கள். சீவக சிந்தாமணியை இயற்றியவர் திருத்தக்க தேவர் ஆவார். இவர் காலம் கி. பி. 10ஆம் நூற்றாண்டு இந்நூலிற்கு மணநூல் என்ற வேறொரு பெயரும் உண்டு. இந்நூலில் மொத்தம் 3145 செய்யுள்கள் உள்ளன. இவையாவும் விருத்தப்பா என்னும் பாவகையில் அமைந்தன. இவர் பயன்படுத்திய இப்பாவகையைக் கொண்டே கம்பர், சேக்கிழார் போன்றோர் தமது காப்பியங்களைப் படைத்தனர். குண்டலகேசி பௌத்த சமயம் சார்ந்த பெருங்காப்பியம் ஆகும். இதனை இயற்றியவர் நாதகுத்தனார். பெரிய புராணம் சைவசமயம் சார்ந்த பெருங்காப்பியம் ஆகும். இதனை இயற்றியவர் சேக்கிழார். கம்பராமாணம் வைணவ சமயம் சார்ந்த பெருங்காப்பியம். இதனை இயற்றியவர் கம்பர். சூளாமணி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம், நீலகேசி ஆகிய ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள் எனப்படுகின்றன. இவை அனைத்தும் பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றியவை ஆகும். மேலும் இவை எல்லாமே சமணப் புலவர்களால் எழுதப்பட்டவை ஆகும். இவற்றுள் சிறந்தது சூளாமணி. இதனை இயற்றியவர் தோலாமொழித் தேவர். நளவெண்பா, திருவிளையாடற் புராணம் ஆகிய காப்பிய நூல்களும் பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றின.

### சிற்றிலக்கியங்கள்

உலா, பிள்ளைத்தமிழ், பரணி, கோவை போன்ற சிற்றிலக்கிய வகைகளில் பல நூல்கள் தோன்றின. ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி, ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணி, பொய்யாமொழிப் புலவர் பாடிய தஞ்சைவாணன் கோவை ஆகியவை பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்கள் ஆகும்.

### முடிவுரை

பிற்காலச் சோழர்கள் வரலாற்றில் நாம் அடியெடுத்து வைக்கும்போது கல்வெட்டுச் சான்றுகள் நமக்குத் தீபம் போன்று பயன்படுகின்றன. திருவாலங்காட்டுச் செப்பேடு அரசியல் பற்றிய முக்கியமான தகவல்களைத் தந்துள்ளது. சோழர் ஆடசியில் கிராமங்களில் ஊராட்சிமுறை நிலவிய காரணத்தால் மக்கள் சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்ததை உத்திரமேரூர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது. திருவிடை மருதூர்க் கல்வெட்டு வரிகொடுக்கத் தவறினோருக்கு வழங்கிய தண்டனையைப் பற்றிக் கூறுகிறது. திருவேண்டிபுரம் கல்வெட்டு, அன்பில் செப்பேடு, கரந்தைச் செப்பேடு, கன்னியாகுமரிக் கல்வெட்டு என்பன பிற முக்கிய கல்வெட்டுகளாகும். சோழர் எழுப்பிய கோயில்களின் சுவர்களில் அணிகலன்கள் போன்று காட்சி தரும் கல்வெட்டுகள் வரலாற்று உண்மைகள் பலவற்றைக் கொண்டுள்ளன. சங்க கால வரலாற்றுக்கு நாணயங்கள் பெரிதும் உதவி புரிகின்றன. அவை சங்க இலக்கியச் செய்திகள் பலவற்றையும் மெய்ப்பிக்கின்றன. ஆனால் அந்நாணயங்களில் பெரும்பான்மையானவை அந்நிய நாட்டு நாணயங்கள் ஆகும். இந்திய வரலாற்றில் மிக உன்னதமான வரலாற்று பெருமைகளை கொண்டது சோழ வம்சம் ஆகும் சோழ வரலாற்றை நாம் மேலும் பல நுண்ணிய அணுகு முறையில் ஆராய்வதன் மூலம் பல வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்த முடியும்.



©2023 by KRISHMA PUBLICATION

**ஆதாரங்கள்**

1. சோழர் வரலாறு: மா. ராசமாணிக்கனார்
2. தமிழக வரலாறும் பண்பாடும்/பல்லவர் காலச் சமுதாய மாற்றங்கள் பக் 106.
3. தமிழக வரலாறும் பண்பாடும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம், பக். 145.
4. தமிழக வரலாறும் பண்பாடும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம்.பக்.167
5. சோழர்கள் - K.A. நீலகண்ட சாஸ்திரி - பாகம் இரண்டு - பக்கம் 726.
6. சோழர்கள் - K.A.நீலகண்ட சாஸ்திரி - பாகம் இரண்டு - பக்கம் 727.
7. *Nilakanta Sastri, K.A. (1935). The Cōḷas, University of Madras, Madras (Reprinted 1984).*
8. *Nilakanta Sastri, K.A. (1955). A History of South India, OUP, New Delhi (Reprinted 2002)*

*****



*©2023 by* KRISHMA PUBLICATION